★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No· QB/8945/78

மலர்: 21 மாசி 17 ரபி-ஆகி 1 இதழ்: 19
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 1-3-79

இன்று எல்லோரும் விரும்புவது
பல்க்கன்
ஸ்கூட்டர்கள் 150 C. C.
மிகவும் சொகுசானதும்,
கலனுக்கு 125மைல் பெற்ரோல் செலவு
சிக்கனமானதும் 5ம் திகதிக்கு முன்னர்
50% முற்பணம் செலுத்தி
ஒருவாரத்தில் கிடைக்க: தொடர்பு:
பல்க்கன் ஏஜன்ஸி
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
போன்: 685 1785

## ஹமீட்டுக்கு ஜே. ஆரின் செய்தி

[கொழும்பு]

சீனவியட்நாம் தகராறு குறித்து ஐ நா. பாதுகாப்பு சபையின் தீர்மானங்களை அவதானித்து அதற்கேற்ப தக்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தன இலங்கை வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ் ஹமீட்டிடம் கேட்டுள்ளார்.

சீன-வியட்நாம் பிரச்சினைகள் குறித்து சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஜனாப் ஹமீட் பணிக்கப்பட்டுள்ளார். [இ]

### தென்கிழக்காசியாவை போர்மேகம் சூழ்கிறது

# சோவியத் தலையீடு பற்றி 48 மணி நேரத்தில் தெரியும்

## சீனர் வெளியேறும்வரை வியட்நாம் ஓயாதாம்

### முக்கிய நகருக்காக உக்கிரமான போர்

(பாங்கொக்)

**பேச்சுவார்த்தைகள் நடத்த முன்வருமாறு சீனாவிடுத்த அழைப்பை வியட்நாம் நிராகரித்துள்ளது. சீனப்படைகள் யாவும் வியட்நாம் மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்படும்வரை சண்டைசெய்வோம் என்று வியட்நாமிய ராணுவ பத்திரிகையொன்று எழுதியுள்ளது.**

**வியட்நாமிலிருந்து சீனத்துருப்புகள் வாபஸ் பெறப்படாவிட்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்று சோவியத் யூனியன் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

**இன்னும் 48 மணி நேரத்தில் சீன-வியட்நாம் போரில் தலையிடுவது பற்றி சோவியத் யூனியன் முடிவு எடுக்கும் என்று தெரிகிறது.**

வெள்ளிக்கிழமை சோவியத் தலைவர் திரு பிரெஷ்னேவ் சோவியத் பாராளுமன்றத்தில் உரைநிகழ்த்தும் பொழுது இது பற்றிய முடிவை அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

#### சீனப்பகுதிக்குள் வியட்நாம் ஊடுருவல்

வியட்நாமிய துருப்புகள் சீனப்பிரதேசத்தில் ஊருவித் தாக்குதல் நடத்தியதாக சீனு ஒப்புக்கொண்டுள்ளது. யுத்தம் ஆரம்பமான 12 நாட்களின் பின்னர் இச் சம்பவம் பற்றி சீனு தகவல் வெளியிட்டுள்ளது.

வியட்நாம் துருப்புக்கள் மூன்றுநாட்கள் சீனப்பகுதியில் இருந்த பின்னர் துரத்தியடிக்கப்பட்டனர் என்றும் இரண்டு கிராமங்களை அவர்கள் எரித்துவிட்டதாகவும், சோவியத் தயாரிப்புக்களான இரண்டு ரொக்கட்டுகளை அவர்கள் விட்டுச் சென்றுள்ளதாகவும் சீனர் கூறினர்.

#### முக்கிய நகருக்காக கடும் மோதல்

வியட்நாம் தலைநகரான ஹனோயை இணைக்கும் முக்கிய பட்டினமான லால்சானைக் கைப்பற்றுவதற்கு சீனர்கள் பெரும் முயற்சி எடுத்துவருகின்றனர். வியட்நாமியரும் கடும் எதிர்ப்பைக் காட்டிவருகின்றனர். இங்கு உக்கிரமான போர் நடைபெற்றுவருகின்றது.

இந்தப்போர் நீடிக்குமானால் தென்கிழக்காசியா முழுமையாகப் பாதிக்கப்படும் என்று ஹனோய் வானொலி அறிவித்துள்ளது.

சோவியத் யூனியன் வியட்நாமுடன் செய்து கொண்டுள்ள நட்புறவு ஒப்பந்தத்தின் கடமைகளை நிறைவேற்ற சோவியத் யூனியன் தவறமாட்டாது என சோவியத் ஏடான பிராவ்டா தெரிவித்துள்ளது.

## இந்திய கொள்கை எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு

வியட்நாம்-சீனபோரில் இந்தியா கடைப்பிடிக்கும் கொள்கையை இந்திய எதிர்க்கட்சிகள் பலமாக கண்டித்துள்ளன.

நேற்று இந்திய மேல் சபையில் இந்தியப் பிரதமர் திரு. தேசாய் கம்போடியாவிலிருந்து வியட்நாம் வெளியேற வேண்டும் என்று பேசிக்கொண்டிருந்த போது எதிர்க்கட்சியில் இந்திரா காங்கிரஸ் மாஸ்கோ சார்பு காங்கிரஸ் ஆகிய கட்சிகள் வெளிநடப்பு செய்தன. இந்தியா, அமெரிக்காவின் போக்கைக் கடைப்பிடிப்பதாக அவர்கள் கூறினார்கள்.

திரு தேசாய் தொடர்ந்து பேசும்போது, சீனாவும் வியட்நாமிலிருந்து வெளியேற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

## ஐ. நா. முட்டுக்கட்டை ஹமீத் சமரச முயற்சி

[கொழும்பு]

சீன-வியட்நாம் விவகாரம் குறித்த விவாதத்தில் ஐ.நா பாதுகாப்புச் சபையில் ஏற்பட்ட முட்டுக்கட்டைகளைப் போக்க இலங்கை வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ சி. எஸ். ஹமீட் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இதுகுறித்து முதல் முயற்சியாக ஜனாப் ஹமீட், நேற்று இந்திய வெளிநாட்டமைச்சர் திரு ஏ பி வாஜ்பாயுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

அணிசேரா நாடுகள் அமைப்பின் தலைமை நாடான இலங்கையின் வெளிநாட்டமைச்சர் என்ற ரீதியில் ஜனாப் ஹமீட் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இதுகுறித்து ஜனாப் ஹமீட் முக்கிய அணிசேரா நாடுகளுடன் தொடர்பு கொண்டு வருகிறார். [இ]

## சில்லறைத் தட்டுப்பாடு: ஜனாதிபதியைச் சந்திப்பர்

[கொழும்பு]

நாட்டில் ஏற்பட்டுள்ள சில்லறைக்கான தட்டுப்பாடு தொடர்பாக நிதியமைச்சர் திரு. ரோனி டி. மெல்லும் கொழும்பு மாவட்ட அமைச்சர் திரு. மல்லிமாராச்சி வீரசிங்கவும் விரைவில் ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவைச் சந்திக்கவுள்ளனர்.

இத்தகவலை கொழும்பு மாவட்ட அமைச்சர் திரு. மல்லிமாராச்சி வீரசிங்க நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய மகாநாட்டில் தெரிவித்தார்.

பஸ் சேவை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இவ்வாண்டு 1,600 பஸ் அடிச்சட்டங்கள் விரைவில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் என்றும் திரு. மல்லிமாராச்சி கூறினர். [ம-இ]

### வெளியூர் மாணவர்களுக்கு

# ஜி. சி. ஈ. முடிவுகள் இன்று கிடைக்கும்

[யாழ்ப்பாணம்]

ஜீ. சி ஈ சாதாரணம்] பரீட்சை முடிவுகள் இன்று பரீட்சார்த்திகளுக்கு கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது பரீட்சை முடிவுகளை நேற்றுமுன்தினமே பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டுவிட்டதாகத் தெரிகிறது வெளியூர் மாணவர்களுக்கு இன்றுமுடிவுகள் கிடைக்கலாமென்று தெரிகிறது

இப்பரீட்சைக்கு 2,50,000 மாணவர்கள் தோற்றுவிக்க இருந்தனர் ஆனால் சூறுவளியினால் பொலநறுவை, மட்டக்களப்பு கல்முனை, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 10,000 மாணவர்களால் பரீட்சை எடுக்கமுடியவில்லை.

1,700 பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சை நடைபெற்றது. புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தபின் இதுவே முதல் முறையாக ஜீ. சி ஈ [சாதாரண] பரீட்சை நடத்தப்பட்டது

இப்பரீட்சை எழுதியமாணவர்கள் 1977ம் வருடம் டிசம்பரில் என். சி ஜீ. ஈ பரீட்சை எழுதவிருந்தனர் ஆனால் கல்வி அமைச்சர் டாக்டர் நிசங்க விஜயரத்தின இப்பரீட்சையை இரத்துச் செய்துவிட்டு ஜீ சி ஈ [சாதாரண] பரீட்சைக்கு ஒழுங்கு செய்தார் இப்பரீட்சை லண்டனிலும் மற்றும் நாடுகளிலும் நடைபெறும் உயர்தரப்பரீட்சைக்கு ஒப்பாகும். [கொ.நி]

## சுவீப் முடிவுகள்

[கொழும்பு]

நேற்று மாலை, கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபை 707-வது சுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு:
**02 M 0196**
ரூபா 1,00,000

2-வது பரிசு:
**04 A 0686**
ரூபா 40,000

3-வது பரிசு:
**11 C 0020**
ரூபா 10,000

100 ஆறுதல் பரிசுகள் தலா ரூபா 713 சதம் 25 கொண்டவை நாளை வரும்

# பிஸ்கால் விற்பனை

## பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

சின்னையா இரத்தினசிங்கம்,
கரவெட்டி வடக்கு.

வழக்காளி

வழக்கு இலக்கம்: 9981

விரோதமாக

1. கணபதிப்பிள்ளை சதாசிவம்
2. கணபதிப்பிள்ளை செல்லத்துரை

இருவரும் கரவெட்டி வடக்கு, கரவெட்டி

எதிராளிகள்

மேற்சொல்லப்பட்ட எதிராளிகள் மேற்சொல்லப்பட்ட இலக்க வழக்கில் 1976-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 20-ந் திகதியின் தீர்வையின்படி ரூபா 13,764/50 மும், இன்னும் ரூபா 12,000/-க்கு 18-3-68 தொடக்கம் 20-9-69 வரையும் 100க்கு 12% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் பணம் இறுபடும் வரையும் 100க்கு 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 250/- (இதில் ரூபா 5000/-மும் 24-8-74இல் ரூபா 1150/-ம் 15-8-75ல் கொடுபட்டது) முத்திரை ரூபா 40/-, வெலியாத்தின் செலவு மொத்தமாக ரூபா 6150/- எதிராளிகள் வழக்காளிக்கு கொடுத்து மீதிப்பணத்திற்குக் கீழே குறித்துச் சொல்லப்படும் ஆதனங்களின் சகல உரித்துக்களையும் பிரயோசனங்களையும் 1979-ம் ஆண்டு பங்குனி மாதம் 30-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு குறித்த ஆதனத்தில் இருந்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என இத்தால் அறிவிக்கிறேன்.

### விற்பனை செய்யப்படும் ஆதனங்களின் அட்டவணை

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி, கட்டைவேலி கோவிற்பற்று, கரவெட்டி வதிரிக்குறிச்சிறை "பண்டாரத்தோட்டம்" நி ப 3, எல்லை கிழக்கும் வடக்கும், தெற்கும் ஒழுங்கை, மேற்கு வேலப்பன் வள்ளியாருக்கும் மறுபேருக்குமுடையாதனம், இதடங்கலிற் இ முக்கால் பரப்பில் அரைவாசி
2. மேற்படி கரவெட்டி வதிரிக்குறிச்சிறை "பண்டாரத்தோட்டம்" நி. ப. 2,5/8 தென்னைகள் கொட்டில், வீடுகள், கிணறும் எல்லை கிழக்கு நன்கொடை வாங்கற்காரரின் மனைவி இலட்சுமிப்பிள்ளைக்குமுரியாதனம், வடக்கு காத்தி பெண் குழந்தைக்கும் மறுபேருக்குமுடையாதனம், மேற்கு வைத்திலிங்கம் பெண் இலட்சுமிப்பிள்ளைக்குடையாதனம், தெற்கு பின்னுற் காணும் 2-ம் ஆதனம் இவ்வெல்லைக்குட்பட்ட வீடுகளில் அரைவாசியும் நிலம் தென்னையடங்கலிற் சொரியலாய் ½ பங்கும் கிணற்றிதலிற் குரிய பங்கும்.
3. மேற்படி இறை "பண்டாரத்தோட்டம்" நி ப 2, 5/8 கொட்டில் வீடுகள் தென்னைகளும் எல்லை கிழக்கு வேலப்பர் கதிர்காமனுக்கும் மறுபேருக்கு முடையாதனம், வடக்கு மேறகூறிய 1-ம் ஆதனம், மேற்கு பின்னுற் காணும் 3-ம் ஆதனம், தெற்கு ஒழுங்கை. இவ்வெல்லைக்குட்பட்ட வீடுகளில் அரைவாசியும் நிலம் தென்னைகளில் 1/9 பங்கும்.
4. மேற்படி இறை "செம்பாட்டு" எல்லை நி. ப, 33/4 பனைகளும் எல்லை கிழக்கு மேற்கூறிய 1-ம், 2-ம் ஆதனங்கள், வடக்கு கந்தையா கைம்பெண் பாறுபதிக்கும் மறுபேருக்குமுடையாதனம், மேற்கு ரோட்டு, தெற்கு ஒழுங்கை .இவ்வெல்லைக்குட்பட்ட வீடுகளில் அரைவாசியும், நிலம் தென்னைகளில் 1/9 பங்கும், தெற்கு ஒழுங்கை, இவ்வெல்லைக்குட்பட்ட ரோட்டு நிலம் பிறநீங்கலாக மிகுதியாவிலும் சொரியலாய் 1/30 பங்கும்.

க. விஸ்வலிங்கம்.
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
பருத்தித்துறை.

மாவட்ட நீதிமன்றம்,
பருத்தித்துறை,
27-02-79. 1772

---

## தளபாடங்கள் செய்வதற்கான
# கேள்விப்பத்திரம்

தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத்திற்குக் கீழ்க்காணும் தளபாடங்கள் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| (1) | கதிரை முதிரை மரத்தில் [பலகை] | 250 |
| (2) | கதிரை முதிரை மரத்தில் பிரம்புப் பின்னல் | 50 |
| (3) | கந்தோர் மேசை முதிரை மரத்தில் | 05 |

கேள்விப்பத்திரத்தை தலைமைக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்வதோடு மேலும் விபரங்களும் தேவைப்படின் சங்க வேலைநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 79-03-10 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல்வேண்டும். தபால் உறையின் இடதுபக்கத்தில் தளபாடங்களுக்கான கேள்விப்பத்திரம் எனக் குறிப்பிடப்படல்வேண்டும்.

பொதுமுகாமையாளர்.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்,
தெல்லிப்பழை.
79-2-26. 1779

---

## 3வது நினைவுதினம்



செல்வன் ஸ்ரீபத்மநாதன்
எங்கள் இதய வானில் குளிர்தரும் நிலவே! உன் மறைவால்வாடித்தவிக்கும் உன் அப்பா, அம்மா, குவைத்தில் இருக்கும் அண்ணன், அண்ணி, பிள்ளைகள் இன்று உனைநினைந்து அஞ்சலி செலுத்துகிறோம். 1698

---

## வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம்
# லொறிவிற்பனை

வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான 24 ஸ்ரீ 33 இசுசு லொறியும், 24 ஸ்ரீ 2510 ஒஸ்ரின் லொறியும் விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்ய விரும்புவோர் ரூபா 250/- வைப்புப் பணமும், விண்ணப்பப்பத்திரத்திற்கு ரூபா5/-ம் செலுத்தி 79-03-23 வெள்ளிக்கிழமைக்கு முன் கேள்வி விண்ணப்பப்பத்திரத்தைக் கந்தோரில் பெற்று 79-03-28ந் திகதி புதன்கிழமைக்குமுன் "பொதுமுகாமையாளர் வலி-கிழக்குதென்பகுதி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம் நீர்வேலி" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவும். தபால் உறையின் இடதுபக்க மேன்மூலையில் "லொறிவிற்பனைக்கு" எனக் குறிப்பிடுக.

பொதுமுகாமையாளர்.

நீர்வேலி.
1979-02 27. 1783

---

## பகிரங்க ஏலவிற்பனை
## 33 ஸ்ரீ 1862.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தின் ஆரம்ப நாள் தொடக்கம் ஒரே பாவிப்பில் இருந்த 33 ஸ்ரீ 1862 பெற்ரோல் லொறி [என்ஜின் ஸ்ராண்டட் (Engine Standard Size) 79-03-10 ம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் வைப்புப் பணமாக ரூபா. 200/- செலுத்தவேண்டும். வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். ஏலத்தில் லொறி எடுப்பவர் அன்றைய தினம் ஏலத்தின் 50% பணம் செலுத்தவேண்டும். மிகுதிப் பணம் 3 நாட்களுக்குள் செலுத்தி லொறியை எடுக்க வேண்டும். எடுக்கத்தவறின் வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. சங்க வேலை நாட்களில் லொறியைச் சங்கத்தில் பார்வையிடலாம். சங்கத்தின் உத்தேச விலைக்கு ஏலம் போகாதவிடத்து ஏல விற்பனையை நிறுத்த சங்கத்திற்கு உரிமையுண்டு

பொது முகாமையாளர்

தெல்லிப்பழை. ப. நோ. கூ. சங்கம்.
தெல்லிப்பழை.
79-2-26. 1778

---

# வரி விளம்பரம்

## தேவை

பிடவை வியாபாரத்தில் அனுபவம் வாய்ந்த ஆண்கள் தேவை. நற்சாட்சிப் பத்திரத்துடன் நேரில் வரவும். அஜந்தாஸ், 54, பெரியகடை, யாழ்ப்பாணம். 1769

## விற்பனைக்கு

பெரியவிளான் இளவாலையில் புதிதாகக் கட்டப்பட்ட கல்வீடும் 5 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; அரியரத்தினம் தவமோகன், மானிப்பாய் மேற்கு, மானிப்பாய். 1775

3 சிறி 4000 தொடர்இலக்க லம்பிறட்டா ஸ்கூட்டர். தொடர்பு கொள்க: பல்க்கன் ஏஜன்ஸி, ஐந்துசந்தி, யாழ்ப்பாணம், போன்: 685.
1786

## பயிற்சி

3 மாதகால பொது விவசாயப் பயிற்சி16—22 வயதுடைய இளைஞர்கட்கு அளிக்கப்படும். இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். அதிபர், விவசாய நிறுவனம், யாழ். க. தொ. நு. அன்ட் வி, நி, மருதனுமடம் சுன்னாகம். 1773

## வியாபாரம் பெருக
## விளம்பரம் செய்க

## தவறிவிட்டது

2 பாஸ்போட், 1 விசாக் காட், அடையாள அட்டை, உடுப்புபாக் ஆகியன தெற்கு புன்னாலைக்கட்டுவன் சந்தியில் செவ்வாய்க்கிழமை இரவு லொறியில் இருந்து தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைத்து தகுந்த சன்மானத்தைப் பெற்றுக் கொள்ளவும். இராமசாமி, ஐஸ் தொழிற்சாலை, வல்வெட்டித்துறை. 1784

மூக்குக் கண்ணாடி ஒன்று சி. எஸ். கே. சந்திக்கும், வேம்படிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்துத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். கண்டெடுத்தவர்கள் உடனடியாக ஒப்படைக்கவும்.C.S.K. கந்தையா செட்டியார் ஸ்தாபனம், 11, கே, கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 1781

## இடமாற்றம்

[புலோலி]

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றப் பதிவாளர் திரு. கமலேஸ்வரன் அனுராதபுரத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார். [அ]

## கட்டிடவேலை ஆரம்பம்

(புலோலி)

பருத்தித்துறை புலோலி ஆண்கள் மகாவித்தியாலய நவீன இருமாடிக் கட்டிட அமைப்பிற்கான ஆரம்பவேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான நிதியைத் தொகுதி எம். பி. ஒதுக்கியிருக்கிறார், (அ)

---

## ஆசிரியை தேவை

காரைநகரில் பின்தங்கிய கிராமங்களில் படிப்பிப்பதற்கு ஆசிரியை தேவை. விண்ணப்பதாரர்கள் க. பொ. த. (சாதாரணம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும். க. பொ. த. (உயர்தரம்) சித்தியடைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 3-ந் திகதி (3-3-79) சனிக்கிழமை காலை 8-11 மணிக்கு நேரில் வரவும்.

P. A. ANDERSSON,
1780 Keerimalai Road, Pandatherippu,

---

## நினைவாஞ்சலி

அக்குவையனஸ் சர்வகலாசாலை வணக்கியல் மாணவன்
அமரர் வசந்தகுமார் – இராசலிங்கம்

நல்லூர் மால்மருகன் திருமலர்ப்பாதங்களில், வள்ளிகுஞ்சரி எடுத்தணைக்க, இன்று ஆறுண்டு நிறைவெய்தி மகிழும் எங்கள் உயிரே மைந்தா! எங்கள் உணர்வே அண்ணா! அறிவொளி நிறைந்த நின் இதயத்தின் அமுத அன்பை, அருளொளி வீசும் கண்களால் காட்டி, அள்ளிக்கொடுக்கும் நின் அருமைக் கரங்களால் எம்மை எடுத்தணைத்து எங்கள் உலகமே நீயென்பாயே! உன் பதமலரே தஞ்சம் என சரணடைந்து நிற்கிறோம் அருள் பொழிவாயப்பா.

உன்னையே தம்பி வாழும்,
அப்பா, அம்மா. தங்கை பபி, தங்கை றூபி,
கொழும்பம்மா, உற்றூர், உறவினர்.

15/16, சங்கிலியன் வீதி, நல்லூர். 1774

---

# WANTED

An experienced English & Tamil Clerk Cum Typist
[Female]
Age — 20 — 25
Call over personally between office hours.



## Githa's Travels & Tour Operators

Office :
615. B, Hospital Road,
Jaffna,
Sri Lanka.

Contract No: 7766

# சீன ஆக்கிரமித்த பிரதேசத்தின் ஒருபகுதியை வியட்நாம் மீண்டும் கைப்பற்றியது!

## வியட்நாமிலிருந்து சீனப்படைகள் உடன் வெளியேற வேண்டும்!!

### அமெரிக்க அதிபர் கடிதமூலம் கோரிக்கை

ஹனோய், பெப். 28

சீன ஆக்கிரமித்த தமது பிரதேசத்தில் 25 கிலோ மீட்டர் பகுதியை வியட்நாம் படைகள் மீண்டும் கைப்பற்றியுள்ளதாக ஹனோ யிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரை நடைபெற்ற போரில் 17 ஆயிரம் வியட்நாமியர்களை சீனப் படைகள் கொன்றுகுவித்துள்ளனர் என்று சீன அறிவித் துள்ளது.

இதேவேளையில் வியட்நாம் படைகள் சீனப் பிராந்தியத்திற்குள் ஊடுருவி மாபெரும் பதில்தாக்குதலை மேற்கொண்டதாகவும் அத் தாக்குதலை முறியடிக்க சீனப்படைகள் மூன்றுநாட்கள் கடும் சமர்செய்ய வேண்டி ஏற்பட்டதென்றும் சீன அறிவித்தது.

வியட்னாமுக்குள்தொடர்ந்து முன்னேறி வரும் சீனப்படைகள் வியட்நாமின் முக்கிய மாகாணமான லாங்சென் நகரைக் கைப்பற்றும் பெரும் திட்டம் ஒன்று தீட்டியுள்ளதாகவு அறிவிக்கப்பட்டுள்ளது.

### அவசரக் கடிதம்

சீன ஆக்கிரமித்துள்ளவியட்நாம் பிரதேசத்திலிருந்து உடனடியாக சீனப்படைகள் வெளியேறவேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு ஜிமி கார்ட்டர் சீனவைக் கேட்டுள்ளார்.

சீனத் துணைப் பிரதமர் திரு. டெங்சியாவோ பெங்குக்கு எழுதிய அவசர கடிதம் ஒன்றிலேயே திரு கார்ட்டர் மேற்கண்டவாறு கேட்டுள்ளார். (இ)

## வியட்நாம் படைகளுக்கு ரஷ்யா உதவினாலும் எதிர்க்கத் தயார்!

### சீனப் பிரதிப் பிரதமர் அறிவிப்பு

பீக்கிங், பெப். 28

வியட்நாமுக்கு ஆதரவாக ரஷ்யா போரில் ஈடுபட்டாலும் அதையும் எதிர்க்கத் தயார் என்ற துணிவுடனேயே வியட்நாமுக்கு எதிரான போரில் சீனப்படைகள் ஈடுபடுத்தப்பட்டன.

இவ்வாறு சீனப் பிரதிபிரதம மந்திரி திரு. டெங் சியாவோபெங் தெரிவித்துள்ளார்.

வியட்நாம் படைகளை வெல்ல முடியாது என்ற கற்பனையை தற்போதைய யுத்தம் அம்பலப்படுத்திவிட்டது என்று அவர் கூறினர். [இ]

## வியட்நாம் மீது சீன 'ஆக்கிரமிப்பு'— உண்மையை மறைப்பதன்மூலம் சீனவுடன் உறவுகொள்ள இந்தியா விரும்பவில்லை

### மொரார்ஜி கூறுகிறார்

புதுடில்லி, பெப். 28

வியட்நாமிலிருந்து சீன வெளியேற வேண்டும், அதேநேரத்தில் கம்பூச்சியாவிலிருந்து வியட்நாம் படைகள் வெளியேற வேண்டும்.

இவ்வாறு இந்தியப்பிரதமர் திரு. மொரார்ஜி நேற்று டெலிவிஷனுக்கு அளித்த விசேட போட்டி ஒன்றில் தெரிவித்தார்.

அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது!

இந்தியா தனது கொள்கைகளை விட்டுக்கொடுக்காது உலக அமைதிக்காகத் தொடர்ந்து பாடுபடும்.

மற்றைய நாடுகளைப் பாதிக்கும் வகையில் இந்தியா தம்மை வளர்த்துக்கொள்ள முயசிக்காது. அதேநேரத்தில் இன்னுமொரு நாட்டின் செல்வாக்குடன் இந்தியாவின் வெளிநாட்டுக்கொள்கைகள் வகுக்கப்படவுமமாட்டாது.

### மற்ற நாடுகளுக்கு கட்டளையிடாது

மற்றைய நாடுகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும்இந்தியா கட்டளைகள் பிறப்பிக்கமாட்டாது.

சீன வியட்நாமில் ஆக்கிரமிப்பு நடத்துகிறது என்று இந்தியா கூறிவருகிறதே; இதனால் இந்திய—சீன உறவில் பாதிப்பு ஏற்படாதா? என்று நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கையில் திரு. தேசாய் கூறியதாவது!

வியட்னாமில் சீன ஆக்கிரமிப்பு நடத்திவருகிறது என்பதை எவரும் மறுக்கமுடியாது. உண்மையை மறைப்பதன்மூலம் சீனவுடன் உறவை வளர்த்துக் கொள்ள இந்தியா என்றுமே விரும்பாது. [இ]

## ஈரான் மீண்டும் எண்ணைஏற்றுமதி

தெஹ்ரான் பெப் 28

ஈரான் நீண்ட அரசியல் நெருக்கடிக்குப் பின்னர் அடுத்த திங்கட்கிழமை முதல் எண்ணை ஏற்றுமதி செய்யும் என்று அந்நாட்டின் எண்ணைக்சம்பனிகளின் அதிபர் தெரிவித்துள்ளார்.

## ரஷ்ய விமானக் கடத்தல்: 2 பெண்கள் 1 ஆண் கைது!

### ஸ்டொக்ஹோமில் தீயிட முயன்றனர்

ஸ்டொக்ஹோம், டெப்28

24 பிரயாணிகளுடன் ரஷ்ய விமானம் ஒன்றைக் கடத்திய மூவர் ஸ்டொக் ஹோமில் விமானத்தை தீமூட்ட முயற்சித்தபோது பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

ஆனந்தமார்க் இயக்கத்தைச் சேர்ந்த சுவீடன் பிரஜைகளான இம் மூவரில் இருவர் பெண்கள் ஆவர் இவர்களுடன் இந்தியப்பிரஜை ஒருவரும் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

24 பயணிகளுடனும் 10 பணியாட்களுடனும் ஒஸ்லோவிலிருந்து மாஸ்கோவுக்குப்பறந்து கொண்டிருந்த போதே இவ் விமானம் ஸ்டொக்ஹோமுக்குக் கடத்தப்பட்டது. [இ]

## காரியாலயம் இடமாற்றம்

[அரியாலை]

யாழ்ப்பாண அரச செயலகத்தில் இயங்கி வந்த விற்பனைத்திணைக்கள வடபிராந்தியக் காரியாலயம் கஸ்தூரியார் வீதியிலிருக்கும் தனியார் ஒருவரின் புதிய கட்டிடமொன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

வடபிராந்திய உதவி ஆணையாளராக திரு. பி. பாலசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். [அ]

## எண்ணை விலையை அதிகரிப்பதில்லை

### 3 நாடுகள் முடிவு

லண்டன், பெப். 28

எண்ணையின் விலையை மேலும் அதிகரிப்பதில்லை என்று ஈராக், மெச்ஷிக்கோ, சவூதி அரேபியா ஆகிய நாடுகள் தீர்மானித்துள்ளன.

எண்ணை உற்பத்தி, ஏற்றுமதி நாடுகள் ஸ்தாபனத்தைச் சேர்ந்த குவைத், லிபியா, 'கட்டார், .வெனிசூலா, அபூதாபி ஆகிய நாடுகள் எண்ணையின் விலையை அதிகரித்துள்ள இவ்வேளையில் மூன்று நாடுகளும் எண்ணையின் விலையை அதிகரிப்பதில்லை என்று மேற்கொண்ட முடிவை பல்வேறு நாடுகள் வரவேற்றுள்ளன. [இ]

## பஸ் ஏறுகையில் விழுந்தாராம்: மயக்க நிலையில் ஆஸ்பத்திரியில்!

[யாழ்ப்பாணம்]

பஸ் விபத்தில் காயமடைந்த ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 16 வயதான கே. சிவராசா என்ற இளைஞர் மயக்கமடைந்த நிலையில் யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கண்ணாடித் தொழிற்சாலையில் பணி புரியும் இவ்வாலிபர் நேற்று அதிகாலை ஆனைக்கோட்டை கூழாவடியில் பஸ்ஸில் ஏறும்போது இந்த விபத்து நடந்ததாகக் கூறப்படுகிறது.

வாலிபர் பஸ்ஸில் ஏறுமுன் பஸ் புறப்பட்டுவிட்டதால் அவர் கீழே விழுந்து மயக்கமடைந்தாரென்றும் கூறப்படுகிறது. [கை]

## ஐயா, நான்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

இறுதிக் கிரியைகளும் மற்றும் இரங்கல் மரியாதைகளும் நடப்பதைக் கண்டும் கேட்டுமிருக்கிறோம். ஆனால் எங்கள் சைவ சமயத்துக்குத் தமது வாழ்நாள் முழுவதையும் கடைசி மூச்சுவரை அர்ப்பணித்த நன் மதிப்பிற்குரிய இந்து மத பீடாதிபதி ஐ கைலாசநாதக் குருக்களுக்கும் மேற்காட்டிய மரியாதைகள் உரியனவென்பதை நாம் மறக்கமுடியாது;

— அடியான்

## வடயேமனுக்கு 10 கோடி டாலர் அமெரிக்க ஆயுத உதவி

வாஷிங்டன், பெப். 28

தென்யேமனுடன் போரிட்டு வரும் வடயேமனுக்கு அமெரிக்கா 10 கோடி டாலர் பெறுமதியான ஆயுதங்களை வழங்கியுள்ளது.

ரஷ்யாவின் ஆதரவுடன் போராடி வரும் தென் யேமனை எதிர்த்துப் போராடவே வடயேமனுக்கு அமெரிக்கா ஆயுதங்களை உதவியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

சிறுபீரங்கிகள், ஏவுகணைகள் அடங்கிய இந்த ஆயுதங்களுக்கான பணத்தை சவூதி ஆரேபியா அமெரிக்காவுக்கு வழங்குகிறது. [இ]

## நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் சில பகுதிகள் யாழ்ப்பாணப் பிரிவுடன் இணையும்?

[யாழ்ப்பாணம்]

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த சில பகுதிகள் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் பிரிவுடன் இணைக்கப்பட உள்ளதாகத் தெரிகிறது.

இதற்கான நடவடிக்கைகளை உயர் அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாகவும் தெரிய வந்துள்ளது

தற்போது நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ்உள்ள அரியாலை கிழக்கு, வண்ணார்பண்ணை நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில் கிழக்கின் ஒருபகுதி, கொக்குவில் மேற்கின் ஒருபகுதி ஆகிய பகுதிகளே யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுடன் இணைக்கப்பட உள்ளதாகத் தெரிகிறது

புதிய இணைப்பை அடுத்து நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் எஞ்சியிருக்கும் பகுதி கோண்டாவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு என பெயர் மாற்றம் செய்யப்படலாம் என நம்பப்படுகிறது. [இ]

# மக்கள் கருத்து

## யாழ். பொது நூல் நிலைய சைக்கிள் பாதுகாப்பு

மக்களின் சமூக வளர்ச்சிக்கு பெரிதும் உதவக் கூடிய கல்வியறிவை அளிப்பதில் பாடசாலையைவிட நூல்நிலையங்களே முக்கிய இடத்தை வகிக்கின்றன. எமது யாழ்ப்பாணப் பொதுநூல்நிலையமும் அவ்வகையில் முன்னணியில் திகழ்கிறது.

இரவல் கொடுக்கும் பகுதி, வாசிகசாலைபோன்ற பகுதிகளுக்கு அடிக்கடி மாணவர்களும் ஏனையோரும் போய்வருவர். ஒரு மாணவன் தனக்கு எப்பெப்போது ஓய்வுகிடைக்கிறதோ அப்போதெல்லாம் போய்வருவான். இவர்களுக்கு துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புப்பகுதி ஒரு பெரிய தடையாக இருக்கிறது.

ஆரம்பத்தில் ஒரு துவிச்சக்கர வண்டிக்கு 10 சதம் அறவிடப்பட்டது. அதுபடிப்படியாக உயர்ந்து இப்போது 25 சதமாகிவிட்டது. அநேகமாக மாணவர்கள்பாடசாலைதொடங்குமுன்னர் சிறிது நேரமும் மதிய இடைவேளையின் போது சிறிதுநேரமும் பாடசாலை முடிவிலும் நேரம்கிடைக்கும் போதெல்லாம் போய்வருகின்றமாணவன் நாளொன்றுக்குக் கிட்டத்தட்ட 75 சதம் செலவு செய்ய வேண்டியுள்ளது. இத்தொகையை செலவு செய்ய முடியாதவர்கள் இப்போதெல்லாம் வருவதைக்குறைத்துக் கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.

நூல்நிலையங்களை நல்ல முறையில் நடாத்தி வருவதற்குக் காரணம் இலவசமாக மக்கள் பயனடைய வேண்டும் என்பதே நூல் நிலைய துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்புச் சேவையால் எமது நூலகத்தின் நோக்கம் நிறைவு பெறுவதாயில்லை.

நூலக துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புப் பிரிவை இலவசமாக நடாத்த வேண்டும் அல்லது அங்கு தினமும் போய் வரும் மக்களை அங்கத்தவர்களாகச் சேர்த்து அவர்களிடமிருந்து ஒருசிறிய தொகையை சந்தாவாகப் பெற்றுக் கொள்ளலாம். இது சம்பந்தமாக யாழ். மாநகராட்சிமன்ற விசேஷ ஆணையாளர் கவனம் செலுத்தி மக்களுக்கு உதவ வேண்டும்.

ச. ஸ்ரீரங்கநாதன்,
மேலைக்கரம்பன்
ஊர்காவற்றுறை.

## ஆணையாளர் கருணை காட்டுவாரா?

யாழ். பொதுசன நூலகத்திலுள்ள சைக்கிள் பாதுகாப்புக்கு 25 சதம் கொடுக்க வேண்டியுள்ளது. பொதுசன நூலகம் சிறுவர்கள், இளைஞர்கள், முதியோர் எல்லோருக்கும் பயன் பாடுடையதாக அமைந்துள்ளது.

உயர்தர மாணவர்களுக்குப் பரீட்சை நெருங்கும் சமயமாதலால் இயன்றவரை பொதுசன நூலகத்தை அவர்கள் நன்றாகப்பயன்படுத்துகிறார்கள் இந்நிலையில் சைக்கிள் பாதுகாப்புக்காக மாணவர்களாகிய நாம் 25 சதம் செலுத்த வேண்டியுள்ளது. காரணம் கேட்டால் ஒரு மணித்தியாலத்திற்கு மேற்பட நிறுத்தப்படும் வண்டிகளுக்கே 25 சதம் என்றார்கள். இது அநியாயம்!

பொதுவாக நூலகத்திற்கு வருபவர்கள் வெளியேற நிச்சயம் ஒருமணித்தியாலம் அல்லது அதற்கு மேல் எடுக்கும். இந்நிலையில் மாணவர்கள் காலையிலும் மாலையிலும், நூற்றுக்கணக்கானோர் சைக்கிளிலேயே வருகிறார்கள். ஒருவர் காலையில் 25 சதம் கொடுத்தால் மாலையிலும் 25 சதம் கொடுக்க வேண்டி நேரிடுகிறது இடையில் தேநீர் அருந்தச் செல்வதாயின் மொத்தமாக ஒரு மாணவனுக்கு 75 சதம் செலவாகிறது. இவர்களைத் தவிர ஏனையோர் பத்திரிகை படிக்கவும் இரவலாகப் புத்தகங்கள் பெறவும் வருகின்றனர். பெரும்பான்மையோர் சைக்கிளிலேயே வருகின்றனர்.

இதனால் சாதாரணமாக மக்களின் வாழ்க்கைச் செலவுடன் இச்செலவும் சேர்ந்து மக்களின் செலவு மேலும் அதிகரிக்கிறது.

பொதுசன நூலகம் ஒன்றின் மூலம் மக்கள் பொழுது போக்கவும் கல்வியறிவை இலவசமாகப் பெறவும் பணம் கொடுக்க வேண்டுமா? ஆணையாளர் நிச்சயம் எம்போன்ற மாணவர்கள் மீது கருணை காட்டுவார் என்றே நம்புகிறேன்.

ந. சூரியநாராயணன்
நாவலர்வீதி,
யாழ்ப்பாணம்.

## மந்திகை ஆஸ்பத்திரியின் அவலநிலை

மந்திகையிலுள்ள பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை கவனிப்பாரற்று அவலநிலைக்கு உள்ளாகியுள்ளது.

பல புதிய கட்டிடங்களையும் நவீன வசதிகளையும், சத்திர சிகிச்சை நிபுணர்களையும் கொண்டு விளங்கிய இவ் ஆஸ்பத்திரி கடந்த ஏழுவருடகாலமாகச் சீர்கேடான நிலையில் இருந்து வருகின்றது. சத்திர சிகிச்சை நிபுணர்களும் வைத்திய நிபுணர்களும் இவ்வாஸ்பத்திரியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டபின் புதிதாக வேறெவரும் இதுவரையும் நியமனம் செய்யப்படவில்லை. அதிக செலவில் நவீன வசதிகளுடன் நிறுவப்பட்ட சத்திர சிகிச்சை நிலையமும் செயற்படாமல் தூங்கிக்கிடக்கின்றது.

இங்கு 'எக்ஸ்-ரே' படப்பிடிப்பு நிலையமும் கட்டப்பட்டு பல வருடங்களாக பயன்படுத்தப்படாமல் இருப்பதால் வடமராட்சி நோயாளிகள் 'எக்ஸ்-ரே' படம் எடுப்பதற்காக யாழ். பெரியாஸ்பத்திரிக்குச் சென்று அலைய வேண்டியுள்ளது.

அத்துடன் பற்சிகிச்சைக்கான உபகரணங்கள், கருவிகள் மிகவும் பழமை வாய்ந்தனவாகவும், அபாயகரமானவையாகவும் காணப்படுகின்றன. இதனால் இங்கு பணிபுரியும் பல் வைத்திய கலாநிதி இவ்வுபகரணங்களைக் கையாளுவதற்கு நோயாளிகள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். பற்சிகிச்சைக்கான 'எக்ஸ்-ரே' வசதிகளும் இங்கு இல்லாததால் அநுராதபுரம் ஆஸ்பத்திரியை நாடிச் செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாஸ்பத்திரியில் வைத்திய நிபுணர்கள் பற்றுக்குறையும், மருந்துத் தட்டுப்பாடும் வடமராட்சிப் பகுதியில் உள்ள நோயாளிகள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாஸ்பத்திரி அபிவிருத்தி வேலைகளுக்கெனப் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் எதுவித நிதி ஒதுக்கீடும் செய்யப்படாமல் இருப்பதுடன் உடுப்பிட்டி, பருத்தித்துறை எம். பி க்களும் இவ்வாஸ்பத்திரியின் அவலநிலையைப்போக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மூடப்பட்டிருக்கும் சத்திர சிகிச்சை நிலையத்தைத் திறந்து நிரந்தரமாகச் சத்திரசிகிச்சை நிபுணர் ஒருவரை நியமிப்பதன் மூலம் இப்பகுதி நோயாளிகளுக்கு யாழ். பெரியாஸ்பத்திரி சென்று சத்திரசிகிச்சைக்காகக் காத்திருக்கும் துரதிர்ஷ்ட நிலையைப்போக்கி உடனுக்குடன் சத்திரசிகிச்சை செய்து நோயாளரின் உயிரைக் காக்க முடியும்.

சுபேந்திரன்.
உடுப்பிட்டி.

# 79 ஆகஸ்ட் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு 81ல் பல்கலைக்கழக அனுமதி?

## இரு பரீட்சைகளினால் சிக்கல்

[கொழும்பு]

பல்கலைக்கழகங்களில் 80ம் ஆண்டு புதிய மாணவர்களைச் சேர்ப்பதில் உயர்கல்வி அமைச்சு பெரும் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதுவரை ஏப்ரலில் நடைபெறும் ஜி. சி. ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்பட்டு வந்தனர்.

இவ்வாண்டு ஏப்ரலிலும் ஆகஸ்டிலும் நடைபெறும் ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சைகளில் தோற்றி சித்திபெறும் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவுசெய்யபபடுவர். இதுவே உயர்கல்வி அமைச்சு எதிர்நோக்கும் பிரச்சினையாகும்.

வழமைபோல் ஏப்ரலில் நடைபெறும் பல்கலைக்கழக புகுமுகபரீட்சையுடன் இவ்வருடப் எச். என். சி. ஈ. வகுப்புகளிற் படித்த மாணவர்களுக்கான ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சை ஆகஸ்டில் நடைபெறுவது தெரிந்ததே.

இருபரீட்சைகளிலும் தோற்றும் ஒரு லட்சத்து 5 ஆயிரம் மாணவர்களில் 5 ஆயிரம் மாணவர்களில் ஐயாயிரம் பேர் மட்டுமே 80ம ஆண்டு ஜனவரியில் பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்படுவர்.

இரு பரீட்சைகளிலிருந்தும் மாணவர்களைப் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்வதில் சிக்கல் ஏற்படும் பட்சத்தில் ஆகஸ்ட் பரீட்சையில் சித்தி பெறுவோரை 1981ல் பல்கலைக்கழகங்களில் அனுமதிப்பது குறித்தும் தற்போது ஆலோசிக்கப்படுவதாகத்தெரிகிறது. [இ]

## கிளிநொச்சியில் பேடன்பவல்தினம்

[பரந்தன்]

சாரணியத்தின் தந்தை பேடன் பவல் பிரபுதினம் கிளிநொச்சி சென்திரேசா மகளிர் கல்லூரியில் கொண்டாடப்பட்டது.

முன்னாள் சாரணத்தலைவர் திரு. கே. சிவலிங்கம் சாரணியக்கொடியை ஏற்றி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்.

இக்கல்லூரி அதிபரும் கிளிநொச்சி மகளிர் சாரணத் தலைவியுமான செல்வி ராஜா சோமசுந்தரம் விழாவிற்குத் தலைமை தாங்கினார். [க]

## சூறுவளி நிவாரணம்: தெல்லி. கூட்டுறவுஊழியர் நிதி உதவி

[தெல்லிப்பழை]

புயல் நிவாரணநிதிக்கு தெல்லிப்பழை கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கக்கிளை 1928 ரூபாவை காங்கேசன் துறைத்தொகுதிபாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கத்திடம் கையளித்துள்ளது.

தெல்லிப்பழை பலநோக்குக்கூட்டுறவுச்சங்க [ஊழியர்களிடமிருந்து தெல்லிப்பழை கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கக்கிளை திரட்டிய 1928 ரூபா 90 சதத்தை தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு. சி. சிவமகாராசா தலைமையில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் பொதுமுகாமையாளர் திரு.வி. நவரத்தினம் ஊழியர் தொழிற்சங்கச் சார்பில் திரு. அ. அமிர்தலிங்கத்திடம் கையளித்தார்.

திரு. அ. அமிர்தலிங்கம் பணத்தைப்பெற்றுக் கொண்டு நன்றி தெரிவித்துப்பேசுகையில் கூட்டுறவுஊழியர்களுக்கு ஐம்பது ரூபா அலவன்சாக வழங்கப்பட வேண்டுமெனவும் இதற்கானபுதிய] வருவாயைப் பெற இயக்குநர் சபையினர் புதியதிட்டங்களைத் தீட்ட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார் தொழிற்சங்க காரியதரிசி திரு. செ. பத்திநாதர் நன்றிகூறினார். [இ]

## கைலாசநாதக் குருக்கள் நினைவு:

## ஐயா, நான் எதை நினைத்து அழுவேன்?

சிவாகமஞானபானு, பிரதிஷ்டாபூஷணம், இந்துமத பீடாதிபதி, நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள் ஐயா அவர்கள் எம்மெல்லோரையும் பரிதவிக்கவிட்டு இறைவனடி சேர்ந்துவிட்டார்.

மதிப்புக்குரிய குருக்கள் ஐயாவே,

தங்கள் கம்பீரமான, தெய்வாம்சம் பொருந்திய தோற்றத்தையும், நற்பண்பையும், பேச்சு இனிமையையும் நினைத்து அழுவதா-

தங்கள் ஆழ்ந்த, வேத-சிவாகம, சமஸ்கிருத, தமிழ் அறிவை நினைந்து அழுவதா-

நயினை நாகபூஷணி அம்பாள் கோவிலில் தாங்கள், அட்சரம் பிசகாமல், கம்பீரமான தொனியில் மந்திரங்களை உச்சாடனம் செய்து நடாத்திய எண்ணற்ற அஷ்டோத்திர, சத்நாம சகஸ்திரநாம அர்ச்சனைகளை நினைத்து அழுவதா-

திருக்கேதீஸ்வர, திருக்கோணேஸ்வர மகாகும்பாபிஷேகங்களைத் தலைமைதாங்கிச் சிறப்புற நடாத்திவைத்த திருக்காட்சிகளை நினைத்து அழுவதா-

பாரதத்தின் தலைநகரான புதுடில்லியில் ஸ்தாபிக்கப்பட்ட குமரன் கோவில் கும்பாபிஷேகத்தில் பங்குபற்றி நமது நாட்டுக்குப் பெருமை தேடித் தந்ததை நினைத்து அழுவதா-

ஆகமவிதிக்கிரமங்கள் தவறாமல் தங்கள் சீவியகாலத்தில் நடத்திவைத்த சிவாலய பூசைகளையும், யாகங்களையும், திருக்கல்யாண வைபவங்களையும் நினைத்து அழுவதா-

ஆண்டுதோறும் எமது நல்லூர்க்கந்தனுக்குக் கொடியேற்றி, மந்திரகிரியாபாவனைகளுடன் தங்கள் இரு கரங்களும் சிரமேற்கொண்டு பயபக்தியுடன் கொடிமரப் பூசை செய்த சிறப்பை நினைத்து அழுவதா-

இந்துமதபீடாதிபதி, பிரதிஷ்டாபூஷணம், பிரதிஷ்டா திலகம் முதலிய சிறப்புப் பட்டங்களையும் தென்னிந்திய சைவ ஆதீனங்களின் நன்மதிப்பைப் பெற்ற பெருமைகளையும் நினைத்து அழுவதா-

பிராமணக் குருமார்களுக்கு ஒப்பற்ற தலைவராக விளங்கி, நல்வழிகாட்டி, இலங்கைக் குடியரசு கலாச்சார அமைச்சரால் நியமிக்கப்பட்ட இந்து சமய விவகார ஆலோசனைச் சபையின் அதிமுக்கிய உறுப்பினராகவும் எமது சமஸ்கிருத பாடசாலைக்கு தலைவராயிருந்து பணியாற்றியதை நினைத்து அழுவதா-

சென்ற ஆண்டு, முத்துக்குமாரசுவாமித்தம்பிரானின் (இலக்கணசுவாமியார்) குருபூசைத்தினத்தன்று 'ஈழநாடு' ஸ்தாபனத்துக்கு வருகைதந்து பூசை செய்து, சிறப்புச் சொற்பொழிவாற்றி நல்லாசி கூறி, ஆசீர்வதித்ததை நினைத்து அழுவதா-

நல்லூரில் ஆண்டுதோறும் நடந்த உற்சவங்களின்போது மஞ்சத்திலும், பூச்சப்பரத்திலும், கைலாயவாகனத்திலும், பெரிய சப்பரத்திலும் திருத்தேரிலும் நடு நாயகமாய் நின்று திருமுருகனுக்குப் பஞ்சாலாத்தி தீபாராதனை செய்த திருக்காட்சியை நினைத்து அழுவதா—

கடல் கடந்து மலேசியா முதலிய பிறநாடுகளுக்குப் பல முறைசென்று கோவில் கும்பாபிஷேக வைபவங்களில் கலந்து தலைமைதாங்கிநின்று நடாத்தி வைத்த பெருமையை நினைந்து அழுவதா—

தங்கள் சொற்பொழிவுகளைக் கேட்டவர்களுக்கே தெரியும் தாங்கள் ஒரு இந்துசமய அறிவுக்களஞ்சியமென்று. அப்படியான ஒரு மகாவித்துவாம்சம் நிறைந்த ஓர் உயர்ந்த மதபீடாதிபதியின் சடுதியான மறைவு எமது பெரும் இளப்பாகும்.

தாங்கள் திருக்கைலாயத்திலிருந்து இறைவன் திருவடிக்கு நித்திய பூசைசெய்துகொண்டு இருக்கிறீர்கள். தங்களைப் பிரிந்து நாங்கள் வாடுகிறோம், தங்கள் ஆன்மா சாந்தியுடைய பிரார்த்திக்கிறோம்.

பிறசமயத்திலுள்ள உயர்ந்த மதகுரு ஒருவர் மறைந்துவிட்டால் எவ்வளவு இரங்கற் கூட்டங்களும் மேம்பட்ட

[4-ம் பக்கம்பார்க்க]

மரக்கரி தேவை
ஒரு அங்குலமும், அதற்கு மேற்படவும்
கொழும்பில் விநியோகம் செய்ய தொடர்புகொள்க.
T. A. J. நூர்பாய் அன் கோ. லிமிட்.
அவுஸ்திரேலியா பில்டிங்
யோர்க் வீதி. கொழும்பு-1.

**வெலிங்டன்**... 

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.—பத்மினி
விக்கிரமாதித்தன்

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம்.ஜி ஆர் - சரோஜாதேவி
திருடாதே

**RIO (Jaffna)**
Phone: 7607
Daily 4 Shows
Demolition Squad

இன்று மட்டும்
**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார், ஜெயசித்திரா. நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
**பயணம்**
நாளை முதல்
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
**தனிப்பிறவி**

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - உஷாநந்தினி
**ராஜபார்ட் ரங்கதுரை**
(ஈஸ்ட்மன் கலர்) [புதிய பிரதி]

இன்று மட்டும்
**ஸ்ரீதர்** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா நடித்த
**உயர்ந்தவர்கள்**
நாளை முதல்
பிரமிளா
**வாழையடிவாழை**

10-வது வாரம்
**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் **பிரேம்நாத்**
(ஈஸ்ட்மன் கலர்)

தினசரி 4 காட்சிகள் இன்று மட்டும்
**ராணி** (யாழ். நகர்)
ஸ்ரீகாந்த் - லக்ஷ்மி
நடித்த
ஜெயகாந்தனின்
**ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்**
டைரக்ஷன் : A. பீம்சிங்

**REGAL** NOW SHOWING
Daily at, 4-3 , 7-00 & 9-30
**HEADLESS HORSEMAN**
(color)
தலையில்லாக் குதிரைக்காரனின் சாகசங்கள் நிறைந்த படம்
Next Attraction
ON FRIDAY AT ELEVEN

**Shanthi** - (Jaffna) Phone-7642
Last few days only
10-30, 2-30, 4-45, 7-00 & 9-30
4th Glorious Week !
**SEVEN NIGHTS IN JAPAN**
More Suitable for Adults — Eastman Color

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி, 2-00, 6-00&9-30
சனி, ஞாயிறு: 10-00, 2-00 6-00 & 9-30
எம். ஜி. ஆர். — பத்மினி
**மதுரைவீரன்** (புதிய பிரதி)

**லிடோ** (யாழ். நகர்)
போன்: 7606 தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
**ஆசை அறுபதுநாள்**


# அடைவு நகைகளை மீட்க முடியாது மக்கள் அவதி!

[பண்டத்தரிப்பு

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத்தில் கீழ் இயங்கி வரும் கிராமிய வங்கியில் அடைவு வைத்த நகைகளை மீட்க முடியாது பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். தாங்கள் வைத்த அடைவு நகைகளை மீட்டு எடுப்பதற்கு ரசீதுடன் செல்லும் பலர் ஏமாற்றத்துடன் திரும்பி வருகின்றனர். இதுபற்றி கிராமிய வங்கியின் கடன் முகாமையாளர் திரு சிற்றம்பலத்திடம் விசாரித்தபோது இவ் வங்கியில் வைக்கப்பட்ட அடைவு நகைகளை திரும்பவும் கொடுப்பதற்கு அனுமதி கேட்டு யாழ்ப்பாணம் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளருக்கு விண்ணப்பித்திருப்பதாகவும் அங்கிருந்து இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என்றும். அனுமதிக் கடிதம் வந்தபின்னரே அடைவு நகைகளை வழங்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

# இன்றைய பலன்

மாசிமாதம் 17-ம் திகதி

(1-3-1979)

வியாழக்கிழமை

**மேடம்:** கொடுக்கல் வாங்கல் மூலம் ஆதாயத்திற்கிடமுண்டு, வசீகரப் பேச்சின் மூலம் எதிரிகளையும் உங்கள் பக்கம் திருப்புவீர்கள், குடும்ப வழி சுகமும் உண்டு.

**இடபம்:** குடும்பவழிப் பிரச்சனை உருவாகும், பிடிவாதக்குணம் பின்தங்கிய நிலையில் தள்ளிவிடும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை நன்று.

**மிதுனம்:** புதிய வாகனம் கொள்வனவு செய்வதில் சிலர் ஈடுபடலாம், கல்வித்துறையில் வித்துவத்தன்மை தென்படும். மாதுவழிச் சுகமும் உண்டு.

**கடகம்:** போதுமென்ற மனத்துடன் புறப்படுவீர்கள், பிறருக்கு உழைப்பதில் உவகை ஏற்படும், புத்திரர்களாலும் புகழ் பரவும், வீட்டிலும் நல்ல சூழ்நிலை தென்படும்.

**சிங்கம்:** முகமன் பேசுவோரிடம் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவும், மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும், எதிரிகள் எக்காளமிடுவர், உஷாராகவிருக்கவும்.

**கன்னி:** அன்பின் பிணைப்பு உங்களைப் பரவசத்தில் ஆழ்த்தும், குடும்பசுகத்திற்கும் இடமுண்டு, எதிர்பாராத செய்திக்கும் இடமுண்டு.

**துலாம்:** பணத்துடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவும், அரசபயத்திற்குமிடமுண்டு, மேலிடத்து அபிப்பிராய பேதத்திற்குமிடமுண்டு.

**விருச்சிகம்:** செய்தொழிலால் சிறப்புண்டு, சிலருக்கு அதிர்ஷ்ட லாபங்களுக்கும் இடமுண்டு. சுற்றுடலில மதிப்பு உயரும் உற்சாகமான தினம்.

**தனுசு:** முயற்சி உயர்ச்சி தரும், பாராட்டுதலுக்குமிடமுண்டு, உயர் கல்வியில் ஈடுபடுவோருக்கு உற்சாக தினம். பந்துக்கள் ஆதரவு பெருகும். இடப் பிரிவும் ஏற்படும்

**மகரம்:** உழைப்பினால் முன்னேற்றமுண்டு. எதிர்பாராத பொருள் வரவுக்கும் இடமுண்டு, வணிகத்துறையில் முன்னேற்றம் காணப்படும்.

**கும்பம்:** வாய்வுக் கோளாறு உடல் நலத்தைப் பாதிக்கும், தொழில்துறையிலும் மந்தநிலை காணப்படும், அவப்பெயருக்கு இலக்காகலாம்.

**மீனம்:** தொழிலில் சில சிக்கல்கள் தோன்றக்கூடும், எந்தவிடயத்திலும் கவனம் செலுத்துவது நன்று திடசித்தம் இருப்பின் எதையும் சமாளிக்கலாம்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

# பொலிஸ் வேட்டையில் ஆமை சிக்கியது!

[புலோலி]

சட்டவிரோதமாகக் கடல் ஆமையைக் கடத்தியவர்கள் வல்வெட்டித்துறைப் பொலிசாரிடம் வகையாக மாட்டிக் கொண்டனர்.

வடபகுதியில் நடைபெற்று வரும் கொலை, கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக பொலிசார் வல்லையில் வைத்து வாகனங்களைச் சோதனையிட்டபோது பருத்தித்துறையிலிருந்து விற்பனைக்காக யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுசெல்லப்பட்ட இக்கடலாமையையும் கடத்திச்சென்ற கார்ச்சாரதி உட்பட இருவரையும் கைது செய்த வல்வெட்டித்துறைப் பொலிசார் ஆமையையும் சந்தேகநபர்கள் இருவரையும் பருத்தித்துறை நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் ஆஜர்செய்தனர்.

சந்தேகநபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதற் கிணங்க தண்டனை வழங்குவதை வேறொரு திகதிக்கு ஒத்தி வைத்த நீதிபதி ஆமையைக் கடலினுள் விடுமாறு உத்தரவிட்டார்.

நீதிபதி, சட்டத்தரணிகள் முகதாவில் ஆமை கடலினுள் விடபபட்டது [அ]

# சீன ஆதரவுக்கூட்டம் கைகலப்பில் முடிந்தது!

[கொழும்பு]

சீனாவுக்கு ஆதரவாக நேற்று கொழும்பில் நடைபெறஇருந்த கூட்டம் குழப்பத்தில் முடிந்தது.

கொழும்பு புதிய நகர மண்டபத்தில் மக்கள் ஜனநாயக முன்னணியினால் நடத்துவதற்கு ஏற்பாடாகி ஆரம்பமான இக்கூட்டத்தை வியட்நாம் ஆதரவாளர்கள் 200பேர் குழப்பமுயன்றபோது இரு நாட்டு ஆதரவாளர்களுக்கும் இடையே கைகலப்பு இடம் பெற்றது.

இதையடுத்து 4 பேர் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (ம-இ

# "கடவுள் வழிபாட்டுடன் ஆரம்பிக்கும் எத்தொழிலும் வெற்றிபெறும்"

(சித்தன்கேணி)

"அதிபர் ஆசிரியர்கள் ஆகியோருக்கு மாணவர்கள் கீழ்ப்படிந்து நடந்து நல்ல ஒழுக்கசீலர்களாகத் திகழ்ந்தால் தான் அவர்கள் பின்பு நல்ல பதவிகளைப் பெற்று வாழ்க்கையில் முன்னேற்றமடையலாம்" என்று வட்டுக் கோட்டை இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு.எஸ். சிவகுருநாதபிள்ளை வட்டுக் கோட்டை திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் கனிஷ்ட பிரிவு அதிபர் சைவப்புலவர் திரு. நா. க. தங்கரத்தினம் தலைமையில் நடந்த கூட்டுப் பிரார்த்தனையின் போது வழங்கிய நற்சிந்தனையில் கூறினார்.

மாணவர்கள் எந்தக்கருமத்தையும் செய்யத் தொடங்கும் போது கடவுளை வழிபட்டு ஆரம்பிக்க வேண்டும் அப்படி ஆரம்பித்தால் காரியம் கட்டாயமாக வெற்றியடையும் விதியைக்கூட கடவுள் வழிபாட்டினால் மாற்ற முடியும் மார்க்கண்டேயர் கதை சத்தியவான் சாவித்திரி கதை ஆகியவை இதற்கு உதாரணங்களாகும் என்று அவர் மேலும் கூறினார். (அ)

# இடமாற்றம் ரத்து

[தெல்லிப்பழை]

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு பொ. கனகசபாபதியின் இடமாற்றம் கல்வியமைச்சரின் உத்தரவின்பேரில் ரத்துச்செய்யப் பட்டுள்ளது.

திரு. கனகசபாபதி இம் மாதம் முதல் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப் பட்டிருந்தார். [புலோ-அ]

# வானொலியில்

(யாழ்ப்பாணம்)

இன்று இரவு 7 மணிக்கு இலங்கை வானொலி தமிழ்ச் சேவை ஒன்றில் கொடிகாமம் கச்சாய் இளஞ்சுடர் அங்கத்தவர்களின் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகிறது.

இந்நிகழ்ச்சிக்கான பாடல்களையும் உரையையும் கச்சாயூர் பண்டிதர் திரு. சுக சிவரத்தினம் ஆக்கியுள்ளார். [கு-அ]

0 0 0

# இன்று

(சித்தன்கேணி)

தேசிய வீடமைப்புத்திட்டத்தின் கீழ் வட்டுக்கோட்டைத் தொகுதிக்குரிய பொன்னாலைச் சந்தியில் கட்டப்பட்ட ஐந்து வீடுகளையும் இன்று வியாழக்கிழமை காலை வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி திரு. தா திருநாவுக்கரசு திறந்து வைப்பார். [அ]

# 2 பொலிசார் மீது நஷ்டஈடுகோரி வழக்கு

[புலோலி]

பெண் கடத்து வழக்கு ஒன்றின் சந்தேகநபர் ஒருவர் பொலிஸ் சார்ஜன்ட் மீதும், பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர். மீதும் நஷ்டஈடுகோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்

கரணவாய் தெற்கைச் சேர்ந்த கார்த்திகேசு மகேந்திரன் என்பவரே பருத்தித்துறைநீதிமன்றத்தில் பருத்தித்துறைப் பொலிஸ்நிலைய சார்ஜன்ட் திரு. எஸ் மாணிக்கராசா பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. விவேகானந்தன் ஆகியோருக்கு எதிராக 15,000 ரூபா நஷ்டஈடு கோரி இவ் வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

கரவெட்டி பெண் கடத்து வழக்கு சம்பந்தமாகத் தம்மைத் தாக்கி அவமானம் செய்ததாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இவ் வழக்கு இம் மாதம் 16ம் திகதி பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு, எம். டி. யேசுரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. [அ]

# புதிய சந்தை நிறுவப்படும்

(புலோலி)

பருத்தித்துறைத் தொகுதியில் உள்ள தும்பளைக் கிராமத்தில் புதிய சந்தையொன்று நிறுவப்படவுள்ளது.

இப்பகுதி விவசாயிகளினதும், நுகர்வோரினதும் நன்மை கருதி இச்சந்தையை நிறுவுவதற்கேற்ற நடவடிக்கைகளைப் பருத்தித்துறை எம். பி மேற்கொண்டுள்ளார். (அ)

# களவு நகை விற்பனைக்கு பொலிஸ் அதிபர் ஆப்பு

(யாழ்ப்பாணம்)

நகைக் கடைகளில் திருட்டு நகைகளை விற்பவர்களைக்கண்டு பிடிக்கவும், நகைக்களவை கட்டுப்படுத்தவும், யாழ் பொலிசார் புதிய நடைமுறையொன்றை செயல்படுத்தவிருக்கிறார்கள்.

பழைய நகைகளை கொள்முதல் செய்யும்போது, விற்பனைசெய்ய வருவோரிடம் அடையாள அட்டை இருந்தால் மட்டுமே நகைகளை வாங்கவேண்டும் என்றும், அத்துடன் விற்பனை செய்பவரது முழுப்பெயர், விலாசம் ஆகிய தகவல்களை அண்மையிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு கொடுக்கவேண்டும் என்றும், கொடுக்கப்பட்ட விபரங்களைக்கொண்டு அப்பகுதிப் பொலிசார், விற்பனை செய்தவர் தமது சொந்த நகைகளை விற்பனை செய்தாரா என அறிய வாய்ப்பு உண்டாகும் என்றும் யாழ். பொலிஸ் அதிபர் நகைக்கடைக்காரர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இத்திட்டத்தை ஒவ்வொரு நகைக் கடைக்காரரும் இன்று முதல் அமுல் செய்யுமாறும், நகை விற்பனையாளர் சங்கத்தின் செலவில் இதுபற்றிய பிரசுரமொன்றை தமதுகையொப்பத்துடன் வெளியிட்டு, ஒவ்வொரு கடையிலும் பொதுமக்களது பார்வைக்கு வைக்குமாறும், இதனால் ஓரளவு களவு நகை விற்பனையைத் தடை செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# உடுப்பிட்டித் தொகுதியில்

## முழுநேர தொ. நு. கல்விப்பிரிவு

## தேவரையாளியில் வகுப்புகள் நடக்கும்

[உடுப்பிட்டி]

உடுப்பிட்டித் தொகுதியில் முழுநேரத் தொழில் நுட்பக் கல்விப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளில் உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வி. கே. ஈசுரபாதம் ஈடுபட்டுவருகின்றார்.

தேவரையாளி இந்துக் கல்லூரியில் இம்முழுநேரத் தொழில் நுட்பக் கல்விப் பிரிவு நிறுவப்படுகின்றது. இது சம்பந்தமான ஆலோசனைச் சபை ஒன்றும் உடுப்பிட்டி எம். பி. திரு. த இராஜலிங்கம் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இத் தொழில்நுட்பக் கல்விப் பிரிவில் மாணவர்களுக்கென மின்சார இணைப்பு, வானொலி எந்திரவியல் ஆகிய பயிற்சி நெறிகளும், பெண்களுக்கென புடவை, உடை அமைத்தல் போன்றவற்றிலும், நெந்தை பின்னுதல், உணவு தயாரித்தல், பாதுகாத்தல் போன்ற பயிற்சி நெறிகளும், நடாத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது இப் பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (அ)

## இவர்களுக்கு

# அரசாங்க வெற்றிடங்களில்

## முன்னுரிமை வழங்கக் கோரிக்கை

[மட்டக்களப்பு]

''அரசாங்கத்தில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு அண்மையில் மட்டக்களப்பில் புயலால் பாதிக்கப்பட்ட சீவல் தொழிலாளர் குடும்பத்திலுள்ள படித்த வாலிபர்களுக்கு முதலிடம் வழங்கப்படவேண்டும்''

யாழ். தெங்குபனம்பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்க சமாஜத்தலைவர் திரு. ஜி. நல்லையா, நீதியமைச்சர் திரு. கே. டபிள்யு தேவநாயகத்தை நேரில் சந்தித்து இவ்வாறு கோரும் மகஜரைச் சமர்ப்பித்தார். மட்டக்களப்பில் புயலால் பாதிக்கப்பட்ட சீவல் தொழிலாளர் நிலை பற்றி திரு. நல்லையா அமைச்சருடன் உரையாடினார். யாழ். சங்க சமாஜச் செயலாளர் திரு, க. வடிவேலு, செயலாளர் திரு. சின்னராசா ஆகியோரும் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

''புயலால் பாதிக்கப்பட்ட சீவல் தொழிலாளர்களுக்கு மாற்றுத்தொழில் கிடைக்கும் வரை, பங்கீட்டு உணவுப் பொருட்கள் இலவசமாக வழங்கவேண்டும்'' என்றும் மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி தொழிலாளர்கள் வாழும் இடங்களை சமாஜத் தலைவர் பார்வையிட்டபோது சீவல்தொழிலாளர்கள் ஆட்டுக் கொட்டில்களைவிட மோசமான கொட்டில்களில் வாழ்வதாகவும், உடை, உணவு போன்றவற்றிலும் மிகவும் கஷ்டப்படுவதைக் கண்டதாகவும், இது பற்றி உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் நிதிமந்திரியைக் கேட்டுக்கொண்டார். இது விஷயமாக நடவடிக்கை எடுப்பதாக நீதியமைச்சர் அவர்களிடம் வாக்களித்தார். [அ]

## எஸ். பி. நடத்திய

## கருத்தரங்கு

# ஒரு திருத்தம்

[யாழ்ப்பாணம்]

வடக்கில் இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி கொள்ளையில் ஈடுபடுகின்றனர் என்ற தலைப்பில் நேற்று 'ஈழநாடு' முதல் பக்கத்தில் வெளியான யாழ் பொலிஸ் அதிபர் நடத்திய கருத்தரங்கு தொடர்பான செய்தியில் ஒரு சிறு தவறு நேர்ந்துவிட்டதற்காக வருந்துகிறோம்.

வடக்கில் வேலைவாய்ப்பின்றியே இளைஞர்கள் கொள்ளை வன்முறைகளில் ஈடுபடுகிறார்கள் என்ற கருத்துத் தவறாகும் என்று பொலிஸ் அதிபர் திரு. ஏ. டபிள்யு. எகொடப்பிட்டிய சுட்டிக்காட்டுகிறார்.

இந்தச் செயல்களில் ஒருசிறு கோஷ்டியினரே ஈடுபட்டுவருகிறார்கள் என்றும் பொதுமக்களின் ஒத்துழைப்பு இருக்குமானால் இவர்களை கைதுசெய்து நடவடிக்கை எடுப்பது சுலபமாகும் என்றே பொலிஸ் அதிபர் அந்தக் கருத்தரங்கில் தெரிவித்துள்ளார்.

# அச்சுவேலிக் கொலை எதிரி விடுதலையானார்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வயோதிபமாது கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்த ... மேனியைச் சேர்ந்த கலாபதி ஜெயரத்தினம் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் பாலம்பிகை கதிர்காமசேகரம் என்ற வயோதிபமாது பட்டப்பகலில் வெட்டிக் கொலைசெய்யப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது இது தொடர்பாக கலாபதி ஜெயரத்தினம் என்பவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்

நேற்று நீதிமன்றத்தில் எதிரி ஆஜர் செய்யப்பட்டபோது இக்கொலை தொடர்பாகப் பொலிசார் மேற்கொண்ட மேல்விசாரணைகளில் சந்தேக நபருக்கு எதிராக எதுவித சாட்சியமும் கிடைக்கவில்லையென்று காங்கேசன்துறைப் பொலிசார் தெரிவித்தனர் இதையடுத்து நீதிபதி நிசாங்க திலநாயக்க எதிரியை விடுதலை செய்தார்.

## அடையாளம் காட்டப்படவில்லை

[வேலணை]

நெடுந்தீவுப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிசார் சிலர் அதே ஊரைச் சேர்ந்த இருவரைத் தாக்கியதாகச் செய்யப்பட்ட புகார் தொடர்பாக நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் யாரும் அடையாளம் காட்டப்படவில்லை.

இவ்வடையாள அணிவகுப்பு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இவ் அடையாள அணிவகுப்பில் நெடுந்தீவுப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சந்தேக நபர்களாக நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டிருந்தனர். சந்தேகநபர்களை அடையாளம் காட்டுவதற்கு அழைக்கப்பட்ட சாட்சிகள் எவரும் அடையாளம் காட்டவில்லை. [அ]

## புதிய அமைச்சு

புதுடில்லி, பெப் 28

உத்தரப் பிரதேசத்தில் இன்று முன்னாள் சபாநாயகர் திரு. பனார்ஜிதரஸ் தலைமையிலான 7 பேர் கொண்ட புதிய மந்திரி சபை பதவி ஏற்றது.

புதிய மந்திரிசபையிலுள்ள ஆறுபேரும் முன்னாள் முதல்வர் திரு. ராம நரேஷ்யாதவ்வின் அமைச்சரவையில் அங்கம் வகித்தவர்கள். [இ]

## நஞ்சருந்தியதாக சந்தேகம்

[யாழ்ப்பாணம்]

மதுவருந்துவதற்கு மனைவியிடம் பணம் கேட்ட ஒருவர் மனைவி பணம் கொடுக்க மறுத்ததால் மனமுடைந்த நிலையில் நச்சுத்திராவகம் அருந்தியதாக சந்தேகிக்கப்படுகிறது.

இப்பரிதாபசம்பவம் நேற்று முன்தினம் பண்டைத்தரிப்பில் நடைபெற்றது

பண்டைத்தரிப்பைச்சேர்ந்த சுப்பிரமணியம் பொன்னுத்துரை [54 வயது] என்பவர் தமதுமனைவி பொன்னுத்துரை பரமேஸ்வரி என்பவரிடம் பணம்கேட்டதாகவும் மனைவி இல்லையென்றதால் அவர் நச்சுத் திராவகம் அருந்தினாராம்.

மயக்கமுற்ற நிலையில் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டு அவர் மரணமானார்.

இது தொடர்பான விசாரணையை சங்கானைப் பொலிசார் மேற்கொண்டுள்ளனர். ]கை[

## பரு. தொகுதி வீதிகளுக்கு நிதி ஒதுக்கீடு

[புலோலி]

பருத்தித்துறைத் தேர்தல் தொகுதியின் கிழக்குப்பகுதியின் போக்குவரத்து வசதி கருதி பல வீதிகள் சீர்செய்யப்படவுள்ளன.

தாளையடி - மருதங்கேணி வீதித்திருத்தத்திற்கென 40,000 ரூபாவும், மருதங்கேணி-உடுத்துறை வீதித்திருத்தத்திற்கென 40,000 ரூபாவும் உடுத்துறை-ஆழியவளை வீதித் திருத்தத்திற்கென 40,000 ரூபாவும், ஆழியவளை-வெத்திலைக்கேணி வீதித்திருத்தத்திற்கென 40,000 ரூபாவும், வெத்திலைக்கேணி - கட்டைக்காடு வீதித்திருத்தத்திற்கென 50,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது- [அ]

## வீதி சீர்கேடு

(புலோலி)

பருத்தித்துறையிலுள்ள பிரதான வீதிகளில் ஒன்றான பருத்தித்துறை தும்பளைவீதி மிகச்சீர்கேடான நிலையில் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது. இவ்வீதிச் சீர்கேட்டால் வாகனங்களும் பொதுமக்களும் போக்குவரத்துச் செய்ய முடியாது கஷ்டப்படுகின்றனர். [அ]

## தொடர்ந்தும் றிமான்ட்

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி மக்கள் வங்கிக் கொள்ளை தொடர்பாக விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள, வங்கிப் பியோன் திரு. ராஜ்குமார், நேற்றுக் காலை மீண்டும், யாழ். நீதிவான் திலநாயக்கா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது, மீண்டும் அவரை இம்மாதம் 14-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். [கெ]

## சீனாவுக்கு எதிர்ப்பு

[கொழும்பு]

யாவற்றுக்கும் இந்தியாவையே பின்பற்றும் இலங்கை சீன-வியட்நாம் யுத்தத்தில் மௌனம் சாதிப்பது கவலைக்குரியது. இலங்கை இன்று ஒரு பொறுப்புள்ள நாடு என்ற வகையில் வியட்நாமிலிருந்து சீன ஆக்கிரமிப்பாளர் வெளியேற இலங்கை வற்புறுத்த வேண்டும்'

என்று அரசாங்க கட்டிடதிணைக்கள சேவையாளர் சங்க உபதலைவர் திரு. ந ஜெயபாலன் விடுத்துள்ள அறிக்கையில் வற்புறுத்தியுள்ளார். [கெ]


## மரண அறிவித்தல்

திருமதி நேசம்மா சரவணமுத்து (நேசக்கா)

சாவகச்சேரியைச் சேர்ந்த இளைப்பாறிய டிறிபேக் கல்லூரி ஆசிரியை நேசம்மா காலமானார். இவர் காலஞ்சென்ற பொன்னு சரவணமுத்துவின் மனைவியும், தயானந்தன் (இலங்கை வங்கி, அனுராதபுரம்) திவியநேசன் (லண்டன்) ஞானசீலன் (வரணி மகாவித்தியாலயம்) ஆகியோரின் தாயாரும், சுசீலா, ஞானசோதி, அதிசயமணி ஆகியோரின் மாமியுமாவர். அன்னாரின் பிரேதசேம ஆராதனை இன்று (1-3-79) வியாழன் பி ப 3-30 மணியளவில் சாவகச்சேரியில் நடைபெறும். 1777

நாடக, அரங்கக் கல்லூரி ரசிகர் அவைக்காக

அளிக்கும்

மஹாகவியின்

"கோடை" (பா நாடகம்)



2-3-79 வெள்ளி வீரசிங்கம் மண்டபத்தில் மாலை 6-45 மணிக்கு நடைபெறும்.

பிரவேசக் கட்டணம்:

ரூபா 5, 3, 2.

ரசிகர் அவையில் உறுப்பினராகச்சேருவோருக்கு விசேட கட்டணச்சலுகைஉண்டு.

1788


## சீனப் பிராந்தியத்தில் ரஷ்ய உளவு விமானங்கள்

தென்சீனாவுக்குமேலே இன்று ரஷ்ய உளவு விமானங்கள் பறந்தன என்றும் ரஷ்ய தலையீடு உடன் ஏற்படலாம் என்றும் யுத்த முனையிலிருந்து கிடைக்கப்பெற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

வியட்நாம் படைகளுக்கு உதவுவதற்காக ரஷ்யா தனது தூரகிழக்கு படையை விரைவில் வியட்நாம் கரைப் பிரதேசத்திற்கு அனுப்பலாம் என்றும் அறிவிக்கப்பட்டது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General PostOffice The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389, Registered as a News Paper in Sri Lanka -